# மட்டக்களப்பு இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் சுவாமிவிபுலாநந்தரின் வகிபங்கு

**வாமன், நா.**

இந்துநாகரிகத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.
*vamannagaiah@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம் -** இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டம் நீண்ட காலமாக இந்துப்பண்பாடு நிலைபெற்றுள்ள ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் பூர்வீகக்குடிகளாக இந்துக்கள் வாழ்ந்துவருவதுடன் காலத்துக்குக்காலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பின் பல பாகங்களிலும் மக்கள்குடியேறினர். பின்னர் ஐரோப்பியர்களின் வருகையினால் புதியமதங்களையும், கலாசாரங்களையும் மட்டக்களப்பு பெற்றுக்கொண்டது. குறிப்பாக, பிரித்தானியராட்சிக்காலத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ சமயப்பரவல் இங்குள்ள இந்துக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படக் காரணமாக அமைந்ததுடன், இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் வித்திட்டது. இத்தகைய இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் சுவாமி விபுலாநந்தரின் வகிபங்கினைக் கண்டறிதலை நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வு இடம்பெறுகின்றது. சுவாமிவிபுலாநந்தர் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ள போதிலும், இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் அவரது பங்களிப்புக் குறித்து இதுவரை எவ்வித ஆய்வுகளும் வெளிவரவில்லை என்பது இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது. விபரண ஆய்வுமுறை, வரலாற்று ஆய்வுமுறை ஆகிய ஆய்வுமுறையியல்கள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்புக் கிராமங்கள்தோறும் அமைக்கப்பட்ட சைவப்பாடசாலைகள், கல்லடி உப்போடையில் உருவான ஆங்கிலமொழிப் பாடசாலை, மாணவர் இல்லங்களின் உருவாக்கம், கல்வி பற்றிய சிந்தனைகள் ஆகியவற்றின் மூலம் கல்வித்துறையில் சுவாமி விபுலாநந்தர் ஏற்படுத்திய மறுமலர்ச்சிகள் இவ்வாய்வில் வெளிக்கொணரப்படுகின்றன. ஆலயங்கள் தோறும் நிகழ்த்திய சொற்பொழிவுகள், எளிமையான வழிபாட்டு முறைகள், இந்துசமய இலக்கியங்களின் தோற்றம், மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்பன அவரது சமய மறுமலர்ச்சியை வெளிக்காட்டிநிற்கின்றன.இந்து சமயப்பாரம்பரியத்தில் தோன்றிய சுவாமிவிபுலாநந்தர் அச்சமயத்தை வளர்ப்பதில் முன்னின்ற அதேவேளை, பிறசமயங்களையும் மதித்து சமய சமரசத்தைப் பேணியமையும் இங்கு ஆராயப்படுகின்றது. சாதிப் பாகுபாட்டை எதிர்த்தமை, இராமகிருஷ்ண மிஷன் மூலம் மேற்கொண்ட பல்வேறுசமூகப்பணிகள் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைந்தமையும் இவ்வாய்வால் தெரியவருகின்றது. மேலும், மட்டக்களப்பில் சைவசித்தாந்த மரபும் வேதாந்தமரபும் இணைந்து வளர்ச்சியடைவதற்கு விபுலாநந்தர் ஆற்றியபணிகளும் வெளிக்கொணரப்படுகின்றன. இவ்வாய்வின் மூலம்மட்டக்களப்பின் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் சுவாமிவிபுலாநந்தரின் பங்களிப்புக்கள் வெளிவருவதுடன், இலங்கையின் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிபற்றிய அறிவும் விரிவாக்கம்பெறும். இவ்வாய்வானது மட்டக்களப்பின் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் சுவாமி விபுலாநந்தரின் வகிபங்கை மாத்திரமே ஆராய்வதாக அமைகின்றது. எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் ஏனைய சமய ஆளுமைகளின் மறுமலர்ச்சிச் செயற்பாடுகளை ஆராய்வதற்கு இவ்வாய்வு வழிவகுக்குமெனலாம்.

**திறவுச்சொற்கள் -** மட்டக்களப்பு, இந்துப்பண்பாடு, மறுமலர்ச்சி, சுவாமி விபுலாநந்தர்

## I. அறிமுகம்

இலங்கையில் இந்துப்பண்பாடு நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும். வடக்கே வெருகலாற்றினையும், தெற்கே மாணிக்ககங்கையினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலினையும், மேற்கே ஊவா வெல்லஸ்ஸ மலைத் தொடர்களையும் இப்பிரதேசம் எல்லைகளாகக் கொண்டிருந்தது[1]. 1961 ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்புமாவட்டம், அம்பாறை மாவட்டம் என்னும் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருமாவட்டமும் ஒவ்வொரு அரசாங்க அதிபரினால் நிருவகிக்கப்பட்டுவருகிறது [2].

இப்பிரதேசத்தில் உள்ள மொத்தசனத் தொகையிற் பெரும்பாலானோர் இந்துக்களாவர். இதனால் இம்மக்களால் பின்பற்றப்படும் இந்துப்பண்பாடும் இங்கு நிலைபெற்றுள்ளது. பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுத்தொகுதியாகும் என டைலர் (E.B.Tylor) வரையறுத்துக்கூறியுள்ளார் [3]. இன்று பண்பாடு பற்றிய வரையறைகளுள் இதுவே பலராலும் கையாளப்படுகின்றது. இவற்றினடிப்படையில் இந்துக்களிடம் சிறப்பாகக்காணப்படும் இத்தகைய பண்பாட்டுக்கூறுகளை இந்துப்பண்பாடு என்று வரையறைசெய்யலாம்.

இந்துசமயம், இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் சமரசத்தன்மையை இன்று மட்டக்களப்புப் பிரதேசம் கொண்டிருப்பதாக அமையினும் இதன் நீண்டகால வரலாற்றுத்தளம் இந்துப்பண்பாட்டின் வேர்களாலேயே நிலை கொண்டிருந்தது. ஆரியச்சுவடுகள் பதியாத மேற்கத்திய நாகரிகத்தை உள்வாங்காத பண்பாட்டு நிலைக்களமாகத் திகழ்ந்த பூமியாக இதனைச் சிறப்பித்துக் கூறமுடியும்.

மட்டக்களப்பின் தனித்துவமான இந்துப் பண்பாட்டை வெளிப்படுத்துவதில் தேசத்துக் கோயில்கள், திருப்படைக் கோயில்கள், கண்ணகியம்மன் வழிபாடு, இராமகிரு'ண மி'ன் முதலானவை முக்கிய இடம் பெறுகின்றன. காலத்துக்குக் காலம் இங்கு ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக்கள், அரசியல் மாற்றங்கள், குடியேற்றங்கள் என்பவற்றுக்கியைய இப்பகுதி

இந்துப் பண்பாடு மாற்றமடைந்ததாயினும் பண்டைய வழிபாடு தொடக்கம் அண்மைக்கால வழிபாடுவரை அத்தனை வழிபாடுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது இப்பிரதேசம்.

### II. மறுமலர்ச்சி – விளக்கம்

மறுமலர்ச்சி என்பதற்கு தமிழ், ஆங்கில அகராதிகளும், அறிஞர்களும் பலவாறு விளக்கமளித்துள்ளனர். பொதுவாக நவீன தேவைகளுக்கு ஏற்ப காலத்துக்கு ஒவ்வாத விடயங்களை நீக்கி கல்வி, பண்பாடு, மனிதத்துவம், முற்போக்கு, விடுதலை முதலாய உன்னத பண்புகளின் உயர்நிலை வளர்ச்சியுடன் சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம், கலை, இலக்கியம் முதலிய அனைத்து அம்சங்களிலும் பழமையை மீட்டுருவாக்கலும் புதுமையை நிலைநாட்டுவதுமான கருத்தியலை மறுமலர்ச்சிஎன்பர [4]. மறுமலர்ச்சியின் முக்கிய அம்சங்களாக இரண்டினைக் குறிப்பிடலாம்.

**அ. பழமையைக் காலத்தின் தேவைக்கேற்ப மீட்டுருவாக்கல்**

**ஆ. புதுமையை நிலை நாட்டுதல்**

இத்தகைய மறுமலர்ச் சிச்சிந்தனை இத்தாலியில் தோன்றி ஐரோப்பா முழுவதும் பரவிக் காலனித்துவ காலப்பகுதியில் இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளுக்கும் அறிமுகமாகியது. மனித பண்பாட்டைப் புதிய திசைக்குச் செலுத்திய இச்சிந்தனை மொழியிலும் புதுமையை ஏற்படுத்தியது. இந்த வகையில் காலனித்துவ ஆட்சி நடைபெற்ற நாடுகளில் குறிப்பாக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள மொழிகள் அனைத்திலும் மறுமலர்ச்சிக் கருத்துநிலை செல்வாக்குச் செலுத்தியது. இந்துப் பண்பாட்டிலும் இதன் தாக்கம் எதிரொலித்தது.

### III. மறு மலர்ச்சிக்கான பின்புலம்

பிரித்தானியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒல்லாந்தரிடமிருந்து மட்டக்களப்பைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கினர். இப்பிரதேசமக்களின் நன்மதிப்பைப் பெறும் நோக்கோடு ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கிச் சமய சுவாதீனக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். இதனால் சமய வழிபாட்டுச் சுதந்திரம் கிடைத்தது. எனினும், இக்காலத்தில் பிரித்தானியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்த கிறிஸ்தவ மி'னரிமார் கிறிஸ்தவ சமயத்தினைப்பரப்பும் முயற்சியிற் பரந்தளவில் ஈடுபடலாயினர். பாடசாலைகள், கல்லூரிகளை அமைத்து அவற்றின் மூலமாக கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சியை முன்னிறுத்திச் சென்றனர். கல்விக்கூடாக அவர்கள் மேற்கொண்ட மதமாற்றச் செயற்பாடுகள் இப்பிரதேச இந்துக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின. பண்பட்ட பண்டைய கலாசாரத்தின் பெருமையை அதன் தற்காலத் தேவையை உணரவைத்தன. இதனால் இப்பகுதியைச் சேர்ந்தபடித்த இளைஞர்களும் சான்றோர்களும் எழுச்சி பெற்று இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக உழைத்தனர். இவர்களுள் வித்துவான் ச.பூபாலபிள்ளை, வித்துவான் அ.சரவணமுத்தன், சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர், வித்துவான் வைத்திலிங்கதேசிகர், சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் சுவாமி விபுலாநந்தரின் மறுமலர்ச்சிச் செயற்பாடுகளை அறியும் நோக்கோடு இவ்வாய்வு இடம்பெறுகின்றது.

### IV. சுவாமி விபுலாநந்தர்

மட்டக்களப்பு நகரின் தெற்கே அமைந்துள்ள காரைதீவு என்னும் கிராமத்திலே வாழ்ந்த சாமித்தம்பிப்பிள்ளை என்பார்க்கும், கண்ணம்மையார் என்பார்க்கும் 1892 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதியன்று பிறந்த குழந்தையே விபுலாநந்த அடிகளார் ஆவர் ஐ5ஸ. மயில்வாகனன் என்பது அவரது இளமைப்பெயர். மயில்வாகனன் ஆரம்பக் கல்வியை கல்முனையில் உள்ள மெதடிஸ்த கிறிஸ்தவமி'ன் பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பில் உள்ள புனித மிக்கேல் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, மட்டக்களப்பு, கல்முனை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆசிரியராகக் கடமைபுரிந்தார்.

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில இலங்கைக்கு வருகைதந்த இராமகிரு'ன சங்க சுவாமிசர்வானந்தரின் தொடர்பு அவருக்குத் துறவறநாட்டத்தை ஏற்படுத்தியது. இதனால் தமது பதவியைத் துறந்து, 1922 ஆம் ஆண்டில் சென்னை மயிலாப்பூரிலிருந்த இராமகிரு'ண மடத்தினைச் சேர்ந்தார். அங்கு துறவறப்பயிற்சியை முறையாகப் பெற்றுக் கொண்ட மயில்வாகனனாருக்கு 1924 ஆம் ஆண்டு சுவாமி சிவானந்தரால் "சுவாமி விபுலாநந்தர்" என்னும் நாமம் சூட்டப்பட்டது. அதன் பின்னர் மட்டக்களப்பிற்கு வருகைதந்த சுவாமிவிபுலாநந்தர் இங்கு கிறிஸ்தவ சமயச் சூழலில் இந்துக்கள் எதிர்நோக்கிய பல்வேறு சவால்களை வெற்றிகொண்டு இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பணியாற்றினார்.

**கல்வித்துறையில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி**

விபுலாநந்த அடிகளார் தோன்றிய காலம் தலை சிறந்த கல்வி நிலையங்களெல்லாம் கிறிஸ்தவ மி'னரிகளுடைய நிருவாகத்தின் கீழிருந்தன. இவ்வாறான பாடசாலைகளில் ஏழைகள் கல்விகற்பது இயலாத காரியமாகவே இருந்தது. அவ்வாறு கற்கும் வசதி கிடைத்தாலும் அவர்கள் அதற்கீடாக தங்களின் பாரம்பரியம், மதம், கலாசாரம் என்பவற்றை இழக்கவேண்டிய நிலையிருந்தது. அக்காலத்தில், ஆங்கிலக் கல்விகற்ற இளைஞர்கள் பட்டம், பதவிக்காக மதம் மாறிக்கொண்டிருந்தார்கள். இதனை அவதானித்த அடிகளார், சைவப்பிள்ளைகள் சைவப் பாடசாலையில் கல்விபயிலவேண்டும் என்ற நோக்கில் பாடசாலைகளை உருவாக்கத் தொடங்கினார். சொந்தப் பண்பாட்டினையும், சொந்தக்கலை, கலாசாரத்தினையும் நிலைக்களனாகக் கொண்டு அமைக்கப்படும் பாடசாலைகளே ஒரு நாட்டின் உயர் செல்வங்களாகும் என்ற கொள்கையினை செயல் வடிவமாக்கும் வகையிலேயே சுவாமிவி புலாநந்தரின் கல்விப்பணி அமைந்திருந்தது. இந்நிலையில் முன்னரே கிழக்கிலங்கை மக்களால் உருவாக்கப்பட்டு நிருவகிக்க முடியாமலிருந்த சில பாடசாலைகளும் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றின் பரிபாலனத்தோடு, காரைதீவிலே பெண்களுக்கென ஒரு பாடசாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அடிகளார் தமது உறவினர்களின் உதவியுடன் 1925 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் திகதி அதற்கான அடிக்கல்லை நட்டுவைத்தார். பின்னர் அப்பாடசாலை கட்டிமுடிக்கப்பட்டதும் அன்னை சாரதாதேவியின் ஞாபகச்சின்னமாக "சாரதா வித்தியாலயம்" எனப் பெயர் சூட்டப்பட்டு 1929 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது[6].

ஆங்கிலக்கல்வியின் நிமித்தமே இந்துக்கள் மதம்மாறுகின்றார்கள் என்பதை உணர்ந்த விபுலாநந்தர் தாமே ஆங்கிலப்பாடசாலைகளை அமைப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டார். இதன் விளைவாக 1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி தற்போதைய சிவானந்த வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அக்கல்லூரியின் திறப்புவிழா நடைபெற்றது. சிவானந்தா வித்தியாலயமானது அதன் அமைப்பில் கவியரசர் தாகூரின் சாந்திநிகேதனை ஒத்ததாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெண் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 1936 ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஆனைப்பந்தியில் ஆங்கிலப் பெண்கள் பாடசாலை யொன்றும் அமைக்கப்பட்டது. தொடர்ந்து, கல்முனை, மண்டூர், களுதாவளை, பழுகாமம், சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை ஆரப்பற்றை என மட்டக்களப்புக் கிராமங்கள் தோறும் சைவத்தமிழ்ப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அடிகளாருடைய இத்தகையபணிக்கு இராமகிரு'ண மி'ன் துணைநின்றது. விபுலாநந்த அடிகளாரின் முகாமையின் கீழ் இயங்கிய பாடசாலைகள் கிறிஸ்தவ மி'னரிகளால் நீண்ட காலமாக நடத்தப்பட்டு வந்த பாடசாலைகளுடன் போட்டி போட்டு கல்வித்தரத்திலே முன்னணியிற்திகழ்ந்தன. "ஆறுமுகநாவலர் பெருமான் இலங்கையின் வட பகுதியில் தோன்றி, யாழ்ப்பாணத்தில் சைவ சமய எழுச்சியுடன் கூடிய கல்வி இயக்கத்தை நடத்தினார். கிழக்கு இலங்கையில் சைவசமய உணர்வுடன், சர்வமத சமரச உணர்வும் ஆங்கிலமொழியறிவும் மேலிட கல்வி இயக்கத்தை நடத்தியவர் சுவாமிவிபுலாநந்தர்[7] எனவும், "சைவசமயத்தை வளமாகக்காட்ட எங்கெங்கு கோயில்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளை நிறுவுவதற்கு முயற்சிகள் எடுத்தார்கள்" எனவும் விபுலாநந்தர் பற்றி வெளிவந்துள்ள கருத்துக்கள் கல்வித்துறையில் அவர் ஏற்படுத்திய மறுமலர்ச்சியினையே வெளிக்காட்டி நிற்கின்றன.

**மாணவர் இல்லங்கள்**

சுவாமி விபுலாநந்தர் பாடசாலைகளை அமைத்ததோடு மாத்திரம் நின்றுவிடாது இராமகிருஷ்ணமிஷன் மூலம் ஏழைச்சிறுவர்களுக்காக மாணவர் இல்லங்களை நிறுவியும் தமது பணியினை விரிவுபடுத்தினார். மட்டக்களப்பிலே சிவானந்தாவித்தியாலயம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1929 ஆம் ஆண்டு நவம்பர்மாதத்தில் பாடசாலையோடு இணைந்ததாக மாணவர் இல்லமும் உருவாக்கப்பட்டது[8]. ஆண்களுக்கென அமைக்கப்பட்ட மேற்படி விடுதியைப்போன்று பெண்களுக்குமான இல்லமொன்று, பகவான் இராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக 1936 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி காரை தீவு சாரதா வித்தியாலயத்துடன் இணைந்ததாக நிறுவப்பட்டது. தொடர்ந்து, மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் பெண்களுக்காக மற்றுமோர் இல்லம் உருவாக்கப்பட்டது.

இம்மாணவர் இல்லங்கள் உருவான பின்னர், மட்டக்களப்பு ஸ்ரீராமகிரு'ண மி'னின் இன, மதபேதமற்ற

செயற்பாடுகள் நாடளாவியரீதியில் பல பிரமுகர்களின் கவனத்தை ஈர்த்தது. இல்லவளர்ச்சிக்குப் பலரும் உதவ முன்வந்தார்கள். வெளிநாட்டுப் பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள், அரசாங்க அதிபர்கள், இந்தியாவிலிருந்து வருகைதரும் இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள் முதலியோர் தமது எண்ணங்களை இவ்வில்லத்தில் உள்ள விருந்தினர் குறிப்பேட்டில் (Visitors book) பொறித்து வைத்துள்ளனர். அவை மாணவ இல்ல நடை முறைகளுக்கும், அதன் ஆன்மீக செயற்பாடுகளுக்கும் சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

இவ்வில்லத்தில் வசித்துவரும் மாணவருக்கு மூன்று அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டது. அவை உடல் உறுதி, உள உறுதி, ஆத்மீக உறுதி என்பனவாகும். இம் மூன்று நோக்கங்களின் அடிப்படையிலேயே இவர்களது நேர அட்டவணையும் வகுக்கப்பட்டு இன்று வரைபின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கல்விபற்றிய சிந்தனைகள்**

சுவாமி விபுலாநந்தரது வாழ்வின் முக்கிய பணி மட்டக்களப்பில், தாம் பொறுப்பேற்ற பாடசாலைகளிலும் புதிதாக தோற்று வித்த பல பாடசாலைகளிலும் புகுத்திய கல்விக் கோட்பாடுகளிலும் கற்பித்தல் முறைகளிலும் பரிணமித்திருந்ததைக் காணலாம். சுவாமி விவேகானந்தரின் பிரசங்கங்களையும், மகா கவிபாரதியின் தேசிய கீதங்களையும் மாணவரிடையே புத்துணர்வினையும், புத்தூக்கத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு அடிகளார் பயன்படுத்தினார். சமயம், மொழி, கலை, தொழிலின் மகத்துவம் ஆகியன அடிகளாரின் கல்விச் சிந்தனையில் முக்கிய இடம்வகித்தன. அவருடைய கல்விக்கோட்பாடு தேசிய கல்வி முறையாகும். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்னும் அடிப்படையைக் கொண்ட மகாத்மாகாந்தி அடிகளின் ஆதாரக்கல்வி முறையை முதன் முதலாக இலங்கையில்பரீட்சித்துப்பார்த்தபெருமைநமது அடிகளாருக்கே உரியது" எனச் சுவாமி நடராஜாநந்தா கூறுவார்[9].

அடிமை வாழ்வின் காரணமாக, அந்நியப் பண்பாட்டின் ஊடுருவல் காரணமாக, சுயபண்பாட்டு வறுமையினை அடைந்து கொண்டிருந்தவர்களைத் தடுத்து நிறுத்திச் சொந்தப் பண்பாட்டுணர்வினை ஊட்டுவதற்குச் சமயக்கல்வி சாலச்சிறந்தது என அடிகளார் கருதினார். அதேவேளையில் அறிவியல் முன்னேற்றத்தில் பின் தங்கிவிடலாகாது என்பதை நன்குணர்ந்து அறிவியற் கல்விக்குச் சிறப்பிடங்கொடுத்து, அத்துறை வளர தனது முழுப்பங்களிப்பையும் நல்கினார். "ஒரு பறவையானது வானில் பறந்து செல்வதற்கு இரண்டு சிறகுகள் எங்ஙனம் அவசியம் தேவைப்படுகின்றனவோ அஃதே போன்று மனிதன் பூரணவாழ்வு வாழ்வதற்கு விஞ்ஞானமும் மெய்ஞானமும் இன்றியமையாது வேண்டப்படுவனவென்பது அடிகளாரின் சித்தாந்தமாகும்." இவற்றை ஆதாரமாகக் கொண்டே இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் கல்வித்திட்டம் அமையப்பெற்றிருக்கின்றது.

விபுலாநந்த அடிகள் குருகுல முறையில் மாணவர்கள் கல்வி கற்பதே சாலச்சிறந்தது, உடல் நலத்திற்கும் உகந்தது என்றகருத்தை முன்வைத்தார். "...இளம்பிராயத்தில் எழுதவும் படிக்கவும் மாணவர்கள் பயிற்றப்படுவதோடமையாது அவர்கள் நல்லொழுக்கசீலராகவும் இறைபக்தியுணர்வுள்ளவராகவும் வளர்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கவல்லது குருகுலக் கல்விமுறையாகும். அத்தோடு அத்தகைய கல்வி முறையால் அறிவுக்கும் அவரவர்க்குப் பொருத்தமான தொழிலுக்கும் ஏற்றபயிற்சியும் அனுபவமும் ஏற்படவழியுண்டாகும். இவை மாணவரதும் பெற்றோரதும் எதிர்கால வாழ்க்கைபற்றிய எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றத்தை அளிக்காது, பொருத்தமான ஜீவனோபாயத்தை வழிவகுத்துக்கொள்ள நிச்சயமாக உதவும். நாட்டில் எல்லோருக்கும் உணவும் உடையும் கிடைப்பதோடு பொருளாதாரப் பற்றாக்குறைவினால் உண்டாகும் வீணான சாதி சமயச் சண்டைகளும் ஏற்படாது சாந்தியும் சமாதானமும் உண்டாகும் [10]. எனக்குறிப்பிடுவது இதனை நன்குணர்த்துகின்றது. பெண்கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் விபுலாநந்தர் தனது எழுத்துக்களில் வெளிப்படுத்தினார். "....விரும்பும் தன்மையாகிய பெண்மையை வளர்த்தற்குரிய உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் இவையெனத் தெளிந்து பெண்மக்களைப் பயிற்றுதலும் உண்மைக்கல்வி பயிற்றுதலாகும்" என பெண்களுக்கும் உடற்கல்வி அவசியமென்பதையும், அதேநேரம் உளப்பயிற்சிக்கான கல்விநெறிகளும் அளிக்கப்படவேண்டு மென்பதையும் குறிப்பிட்டுள்ளார்[11].

**சமயப்பணிகளில் மறுமலர்ச்சி**

ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் சங்கத்தைச் சேர்ந்த ஓர் இந்துத் துறவி என்பதால் இந்து சமயக்

கருத்துக்களைத் தமது எழுத்திலும் பேச்சிலும் வலியுறுத்தியவர் சுவாமிவிபுலாநந்தர். அவ்வகையில் இந்து சமயம் தொடர்பாக பெருமளவு கட்டுரைகளையும் கவிதைகளையும் படைத்திருந்தாலும் பிறசமயங்கள் குறித்துக் கண்டனங்களையோ விமர்சனங்களையோ அவர் வெளிப்படுத்தவில்லை. நம் நாட்டின் பெருமை என்ற கட்டுரையிலே "உலகத்திற் பிறந்த மானிடர் அனைவரும் தாம் மேற்கொள்ளும் சமயத்தை உண்மையுடன் அறிந்து, அதில் கூறியுள்ள கொள்கைகளை அவலம்பிக்க முயற்சிசெய்ய வேண்டும். பிறகு பிறமதங்களின் உண்மையை அறியவேண்டும். அப்படிச்செய்யாவிடின், பளிங்கு மாளிகையில் வசிப்போர்தாம் இருக்குமிடம் மறந்து, பிறர்மீது வம்புக்காகக் கல்லெறிவது போல முடியுமேயன்றி, வேறன்று [12]. என அவர்குறிப்பிடுவது சமயசமரசப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

சமயம் என்பது மனிதன் தனது நாளாந்த வாழ்வில் அனுட்டிப்பதற்குரியதேயன்றி, வாதிடுவதற்கோ, போதிப்பதற்கோ, சண்டையிடுவதற்கோ உரியதன்று என்பதே விபுலாநந்தரின் முடிவாகும். எதனையும் நாம் போதித்துக்காட்டுவதிலும் பார்க்கச் சாதித்துக்காட்டுவதால் நமக்கும் நமது சமூகத்துக்கும் பெரு நலமுண்டாகும் என்பது அவருடையகருத்து. கிறிஸ்தவப்பாதிரிமார்கள் சிலர் குறுகிய நோக்கத்துடன் தமது சமயத்தை இந்துக்களிடையே பரப்ப முயற்சித்ததைக் கண்டிக்கும் ஒரு சில இடங்களிலே கிறிஸ்தவ சமயத்தையும், கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயற்சித்தோரையும் "புறமதம்" எனவும் "புறமதத்தார்" எனவும் குறிப்பிட்டுள்ளார்ள [13]. அதே சமயம் கிறிஸ்துவையும் கிறிஸ்தவசமயத்தின் நல்ல அம்சங்களையும் கிறிஸ்தவப் பெரியார்களையும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் புகழத் தயங்கியதில்லை.

மகாகவி சுப்ரமணிய பாரதியார் தனது விநாயகர் நாண்மணிமாலையில் எல்லா உயிர்களும் இன்ப முற்று அன்புடன் இணங்கி வாழ விநாயகரிடம் வரம் கேட்டதைப் போன்று சுவாமிகளும் எல்லோரும் இன்புற்றிருக்க அருளுமாறு இறைவனை வேண்டுவதை அவதானிக்கலாம். 1924 ஆம் ஆண்டு துறவு பூண்டு சுவாமி விபுலாநந்தராக மாறுவதற்கு முன்பே, 1920-21 காலப்பகுதியில் மானிப்பாய் இந்து கல்லூரியின் பிரதம ஆசிரியராகப் பதவி வகித்த காலத்தில் மயில்வாகனனார் மாணவர்களை நோக்கி "சிவபெருமான் காட்சிதந்து உங்களுக்கு என்னவரம் வேண்டும் என்று கேட்டால், நீங்கள் என்ன கேட்பீர்கள்? " என்று வினவிய பொழுது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதிலளித்தார்கள். சுவாமிகளோ "நான் என்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்று விடும், அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால், "சேவை செய்ய வரம் தா" – என்றிப்படியாகக் கேட்பேன்" எனக்கூறினார். அடிகளாருடைய இத்தகைய கருத்துக்கள் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தின.

**சொற்பொழிவுகள்**

இந்துக்கள் மத்தியில் இந்து சமயம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் சமயச் சொற்பொழிவுகள் ஆலயங்களிலும், பிற சமூக நிறுவனங்களிலும் அடிகளாரால் நிகழ்த்தப்பட்டன. மதமாற்றத்தைத் தடைசெய்யும் நோக்கோடு அடிகளாரது பேச்சுக்கள் அமைந்தன.எனினும் பிறமதங்களைக் கண்டனம் செய்து பேசும் முறையை அவர் கைக்கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் சுதேச சமயத்தையும், பண்பாட்டையும் பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும் என்பதையே அடிகளார் விரும்பினார்." வைதீகநெறி", "சைவசமயம்" முதலான தலைப்புக்களில் தம்கருத்துக்களை வெளிப்படுத்தினார். மட்டக்களப்பு மக்கள் மாத்திரமன்றி யாழ்ப்பாணத்து மக்களும் அடிகளாரின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தனர்.

முத்தமிழிலும் வல்லமை பெற்று விளங்கிய விபுலாநந்தர் கேட்போரைக்கவரும் வகையில் சொற்பொழிவாற்றும் நாவன்மை பெற்றவராகத் திகழ்ந்தார். சைவசித்தாந்த மகாசபைத் தலைமையுரையும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தமிழ் மாநாட்டின் தலைமையுரையும், தமிழ்த் தோன்றல் சாமிநாதையரைப் பாராட்டிய விழாவில் ஆற்றிய உரையும் அறிஞர்களின் மத்தியிலே பெரியதோர் ஆழ்ந்த மதிப்பைத் தேடிக்கொடுத்தன.

தான் மாத்திரம் சொற்பொழிவுகளை நிகழ்த்தாது தமது நண்பர்களையும், மாணவர்களையும் இத்துறையிலே ஈடுபடுத்தினார். சுவாமி விபுலாநந்தரது சொற்பொழிவின் சிறப்புக்குறித்து சுவாமி சித்பவானந்தர் மேல் வருமாறு குறிப்பிடுகின்றார் "விபுலாநந்தருடைய மேடைப்பேச்சில் தனிச்சிறப்பு ஒன்று இருந்தது. தங்கு தடையின்றி சொல்மாரி பொழியும். சொற் சுவையும் பொருட்சுவையும் அதில் புதைந்திருக்கும்.

கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அது அருள்விருந்தாகும். காலவரையறையை அவருடைய பேச்சு கடந்து போகாது. துவக்கத்திலிருந்து முடிவுவரையில் கேட்பவர்களுடைய உள்ளத்தை அதுகவர்ந்துகொண்டிருக்கும். சுவாமிகளின் தலைமையின் கீழ்பேசுபவர்களும் எடுத்துக்கொண்ட விஷயத்தினின்று விலகிப்போகாது அவர் பார்த்துக்கொள்வார். கொடுத்துள்ள நேரத்திலும் பேசுபவரை அவர் உட்படுத்துவார். அவையின் கண் பேசுபவர்கள் பல தரப்பட்டவர்களாக இருந்தாலும் அன்னவர்களை நன்கு அடக்கியாண்டு அவையை அவர் இனிது முடித்து வைப்பார். அத்திறமையானது அலாதியாக அவருக்கு சொந்தமாய் இருந்தது" [14].

**வழிபாட்டு முறை**

வழிபாட்டு முறையிலும் சுவாமிவி புலாநந்தர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். எளிமையானதும் உண்மையானதுமான இறைவழிபாட்டு முறை அவரால் எடுத்துரைக்கப்படுகின்றது. இறைவன் உவக்கும்மலர்கள் எவை என்ற வினாவினை எழுப்பி உள்ளக்கமலம், கூப்பிய கைக்காந்தள், நாட்ட விழிநெய்தல் என பதில் அளித்திருப்பதை "ஈசனுவக்கும் மலர்" எனும்பாடலில் காணமுடியும். அதாவது உள்ளத்தாலும், கை கூப்பி வழிபடுவதாலும், அவன் அருளை எண்ணி கண்ணீர் விடும் விழிகளாலும் வழிபடுகின்ற எளிய வழிபாட்டு முறையை அவர் வலியுறுத்திச் செல்கிறார். ஆக, பொருட் செலவோடு செய்யப்படுகின்ற சடங்குகளையும் கிரியைகளையும் அவர்விரும்பவில்லை என்பது இதனால் புலனாகின்றது.

**மொழிபெயர்ப்புக்கள்**

இந்துசமயக் கருத்துக்கள் வெறுமனே வடமொழியிலும், தமிழ் மொழியிலும் மாத்திரம் இருப்பதை விரும்பாத அடிகளார்மேலை நாட்டினரும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கோடு அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயற்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த " திருப்பள்ளிஎழுச்சி" The Sacred Hymn of Awakening என்ற தலைப்பிலும், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த "பெரிய திருமொழி"யின் முதற்பத்து பாடல்களும் In Praise of The Divine Name என்றதலைப்பிலும் ஆங்கிலப்பாடல்களாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளமையினை உதாரணமாகக்குறிப்பிடலாம்.

**இந்து தத்துவங்களில் ஈடுபாடு**

சுவாமி விபுலாநந்தர் வேதாந்தம், சித்தாந்தம் என்ற இருதத்துவப் பிரிவுகள் தொடர்பான சிந்தனைகளை முன்வைத்துள்ளார். ஆரம்பத்தில் சித்தாந்தியாக எழுதிய, நடந்த அவர் பின்னாட்களில் ஒரு வேதாந்தியாகக் காட்சியளிக்கின்றார். இராமகிருஷ்ணமிஷனோடு ஏற்பட்டதொடர்பு இதற்குக் காரணமாக அமைந்திருத்தல் வேண்டும்.

சுவாமி விபுலாநந்தர் ஒரு சைவசித்தாந்தியா? அல்லது வேதாந்தியா? என்ற கேள்வியை சிலர் எழுப்புவர். வேண்டாத இந்த விபரங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் முறையில், "பழமையும் புதுமையும், துவைதமும் அத்வைதமும், பௌதீக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக் காட்சியும், மேற்றிசையறிவும் கீழ்த்திசைச் சமயமும், மன மொடுங்கிய தியான நிலையும் மன்பதைக்குத் தொண்டு புரிதலும் சமரசப்பட வேண்டிய காலம் இது [15]

என்று அவர் குறிப்பிட்டுள்ளமை அவரது சமரசப் போக்கினையே காட்டிநிற்கின்றது. அத்தோடு சுவாமி விபுலாநந்தர் எந்த ஒரு இடத்திலும் தன்னை சைவசித்தாந்தியாகவோ அல்லது வேதாந்தியாகவோ அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேதாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட இராமகிருஷ்ணமிஷனோடும், சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பின்பற்றிய அருணாசல தேசிகர் போன்றவர்களோடும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். இராமகிருஷ்ணமிஷனில் துறவியர்தங்கும் மடத்திற்கு "சிவபுரி" எனப்பெயர் வைத்தமை இவரது சமரசத்தன்மையை வெளிக்காட்டுகிறது.

**சமுதாயப்பணியில் மறுமலர்ச்சி**

தமிழ்நாட்டிலே ஒரு பாரதியைப்போலும், வட நாட்டிலே ஒரு விவேகானந்தரைப்போலும் இலங்கையிலே அதிலும் சிறப்பாகக் கிழக்கிலங்கையிலே ஒரு சமுதாயப்புரட்சியை உண்டாக்கியவராக சுவாமிவி புலாநந்தர் அடையாளப்படுத்தப்படுகின்றார். துறவு நிலையை அவர் தேடியது மனித குல சேவையின்பால் அவருக்கிருந்த ஆத்ம தீவிரம் காரணமாகவே என்றும் கூறலாம். விபுலாநந்தரது சமூகம்பற்றிய தேடலானது சாதி குல பேதங்கள் இல்லாத, வருணபேதங்கள் இல்லாத, பிரிவினையற்ற ஒரு சமூகமாகவே இருந்தது.

சாதிமத பேதங்களையும், போலித் தனங்களையும் வெறுத் தொதுக்கிய விபுலாநந்தர் தமது சொந்த வாழ்விலும் சீரியநெறி முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகினார். துறவு பூண்பதற்கு முன்பே யாழ்ப்பாணம் சென்று பற்றிக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியபோது சாதி ஏற்றத்தாழ்வுகளைக்கண்டித்த அவர் குருநகர் முதலிய இடங்களுக்குச் சென்று சமூக ரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் பின்தள்ளப்பட்டிருந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றினார். அவர்களது குறைநிறைகளைக் கேட்டறிந்தார். தாழ்த்தப்பட்ட மக்களால் "பெரிய கோயில் வாத்தியார்" எனப் புகழவும்பட்டார்.

மனித சமூகத்திற்குப் பொதுவாகவும் தமது சமூகத்திற்குச் சிறப்பாகவும் வேண்டிய அறிவுடைக் கருத்துக்களை, ஆலோசனைகளை, உபதேசங்களைத் தாராளமாக வழங்கியுள்ளார். "பிரபுத்தபாரதம்", "இராமகிருஷ்ண விஜயம்", "விவேகானந்தன்", "வேதாந்தகேசரி", "ஈழகேசரி" ஆகிய இதழ்களில் எழுதிய கட்டுரைகளில் அவரது உள்ளக்கிடக்கையினை அறியக் கூடியதாகவுள்ளது.

### V. நிறைவுரை

மேற்குறித்தவற்றின் அடிப்படையில் நோக்குகின்ற போது சைவப்பாடசாலைகள், கல்வி பற்றிய சிந்தனைகள், இராமகிருஷ்ணமிஷன், இந்து இலக்கியங்கள், இந்துதத்துவங்கள், சொற்பொழிவுகள், சமுதாய சீர்திருத்தம் என்பவற்றில் சுவாமி விபுலாநந்தரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மட்டக்களப்பில் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைந்ததுடன், அவரது தனித்துவமான ஆளுமையையும் வெளிப்படுத்தி நிற்பதை அறியமுடிகின்றது.

### உசாத்துணைகள்

1. வெல்லவூர்க் கோபால், மட்டக்களப்பு வரலாறு, மட்டக்களப்பு, மனுவேதா, 2005, ப.16
2. மௌனகுரு,சி., மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், கொழும்பு, குமரன் புத்தக இல்லம், 2014, ப .37
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம், 2009, ப .152
4. சுதர்சன்,செ., மறுமலர்ச்சிக் கவிதைகள், பேராதனைப்பல்கலைக்கழகம், தமிழ்த்துறை, 2006, ப .12
5. சிவசுப்ரமணியம்,வ., விபுலாநந்த தரிசனம், மட்டக்களப்பு, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, 1993, ப.5
6. யோகராசா,செ. (தொகு.), சுவாமிவிபுலாநந்தர் - பன்முகப்பார்வை, கொழும்பு, குமரன் புத்தக இல்லம், 2015, ப.8
7. மணி,பெ.சு., சுவாமி விபுலானந்தர், சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1992, ப 47
8. செபரத்தினம்,க., விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வழமும், கொழும்பு, சைவ முன்னேற்றச் சங்கம், 1994, ப.21
9. சற்குணம்,எம்.(பதி.), அடிகளார் படிவமலர், காரைதீவு, 1969, ப.30
10. சுவாமி விபுலாநந்தர், இந்துசாதனம், யாழ்ப்பாணம், சைவபரிபாலனசபை, 1939, ப.1
11. சுவாமி விபுலாநந்தர், சுவாமிவி புலாநந்தரின் ஆக்கங்கள் (தொகுதி-2),மட்டக்களப்பு, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, 1995யு, பக்.19-20
12. சுவாமி விபுலாநந்தர், சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்(தொகுதி-1),மட்டக்களப்பு, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, 1995B, பக்.148-149
13. அருணாசலம்,க. சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள், கொழும்பு, தென்றல் பப்ளிகே'ன், 2002, ப. 27
14. சித்பவானந்தர், "சுவாமிவிபுலாநந்தர்", மட்டக்களப்பு, ராமகிருஷ்ண மிஷன் பொன்விழாமலர், 1976, ப. 26
15. சுவாமி விபுலாநந்தர், சுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங்கள்(தொகுதி-3), திருகோணமலை, கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, 1997, ப.253